## கோயில் கொமாண்டூர் இளையவில்லி ஆச்சான் (பாலதந்வி)

## வாழி திருநாமம்

பக்தியுடன் பதின்மர் கலைப் பகருமவன் வாழியே
பண்டரங்கர் பதம் நெஞ்சில் பற்றி நின்றான் வாழியே
எதிராசர் இணை அடியே தஞ்சம் என்றான் வாழியே
எழில் மறையின் ஏரிக்கோர் மதகானான் வாழியே
முத்தி தரும் நெறி தன்னை மொழிந்தருள்வோன் வாழியே
மூது திருமலை நம்பிக்கு ஆட்செய்தான் வாழியே
சித்திரையில் ஆயில்யம் சிறக்க வந்தோன் வாழியே
சீர் பாலதந்வி குரு திருத்தாள்கள் வாழியே

சீராரும் திருப்பதியில் திகழ்ந்திருந்தான் வாழியே
வேங்கடவர் தாள் இணையை விரும்புமவன் வாழியே
ஏராரும் எதிராசன் இணை அடியோன் வாழியே
சீராரும் அவர் தாய்க்குப் பின்னவள் தனயன் வாழியே
பத்தியுடன் பாடியத்தைச் செப்புமவன் வாழியே
எழில் சித்திரை ஆயில்யம் வந்துதித்தான் வாழியே
பார் விளங்கும் கொமாண்டூரில் அவதரித்தான் வாழியே
அந்தமில் சீர் இளையவில்லிப் பரன் அடிகள் வாழியே

---